நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.11.06.2021

2021ம் ஆண்டு ஜீன் மாதம் 11.06.2021ம் தேதி வெள்ளி கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.தி.சகிலா, B.Com.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)** போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32–ல் சர்வே வார்டு II பிளாக் எண்.32, நகர புல எண்.4156,4157ல் முழுமைத்திட்டத்தில் தொழிற்சாலை பகுதியில் உள்ளது.மேற்கண்ட இடத்தில் நான்கு பக்கமும் தகரதத்தால் மறைக்கப்பட்டு இயந்திரம் இயங்கும் இடத்தில் மேடை அமைக்கப்பட்டுள்ளது. 25HP குதிரை திரன் கொண்ட மின்மோட்டார் நிறுவி இயக்க மனுதாரரியிடம் இருந்து மனு வரப்பெற்றுள்ளது ,மேற்கண்ட தொழிற்சாலை இயக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது..

**நிபந்தனைகள் :**

1. அனுமதிக்கப்பட்டுள்ள மின்மோட்டார் தவிர எவ்வித இயந்திர அமைப்பும் நிறுவ கூடாது.
2. மரப்பேட்டையிலும் எவ்விதமான திறவை விளக்கு வைக்கவோ, புகை பிடிக்கவோ கூடாது என்ற அறிவிப்பு வைத்து கடைபிடிக்க வேண்டும்.
3. நெருப்பு அபாய பாதுகாப்பிற்காக ஒவ்வொரு 50 சதுர அடிக்கும் 4 கேலன் தண்ணீர் வீதம் தண்ணீர் இருப்பு வைத்திருக்க வேண்டும்.
4. தீயணைப்பு அதிகாரியிடமிருந்து ஆட்சேபணையின்மை சான்று பெறப்பட வேண்டும்.
5. மோட்டார் வைக்கப்பட்டுள்ள இயந்திரத்தினை சற்று பாதுகாப்பு தடுப்புடன் வைக்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள இயந்திரம் 6 மாதத்திற்குள் நிறுவப்பப்பட வேண்டும்.
7. தொழிற்சாலையினுள் உண்டாகும் கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.
8. இயந்திரங்களை மாலை 6 மணிக்கு மேல் காலை 6 மணி வரை இயக்க கூடாது
9. அனுமதிக்கப்பட்டுள்ள வரைபடத்தின் நகல் மற்றும் உத்தரவினை கடிதத்தின் தெளிவான இடத்தில் பார்வையில் படும்படி வைக்கப்பட வேண்டும்.
10. காப்பீட்டு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
11. தீயணைப்பு கருவிகள் செயல்படும் (Fire Extinguisher) நிலையில் வைக்கப்பட வேண்டும்.
12. மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறப்பட்டாலும் உத்தரவு ரத்து செய்யப்படும்.
13. முதலுதவிப்பெட்டி செயல்பாட்டு தன்மையுடன் வைக்கப்பட வேண்டும்.
14. பிரதானவாயில் கதவுகள் வெளியில் திறக்கும் படியாக அமைக்கப்பட வேண்டும்.
15. தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு உடல்நலம் பற்றிய மருத்துவ சான்று பெறப்பட வேண்டும்.
16. தொழிற்கூட கட்டிடம் மற்றும் இயந்திரங்கள் காலமுறைப்படி பழுது நீக்கம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

**அலுவலகக்குறிப்பு** **மன்றம் அனுமதிக்கலாம்.**

1. **மேற்படி** தொழிற்சாலையினை உத்திரவு வழங்கிய நாளில்இருந்து ஓராண்டு காலத்திற்கு மட்டும் செல்லத்தக்கது. மீண்டும் ஒவ்வொரு வருடமும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**(ந.க.எண்.1621/2021/எச்2)**

**தீர்மான எண் : 106** அனுமதி நிபந்தனைகளுக்குட்பட்டு அளிக்கப்படுகிறது

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி.